## சென்னை மெட்ரோ ரெயில்

# கட்டணக் குறைப்பு இன்று அமலுக்கு வந்தது!

சென்னை, பிப். 22–

சென்னை மெட்ரோ ரெயில்கட்டணம்குறைப்பு இன்று காலை முதல் அமலுக்கு வந்தது.

சென்னையில் 2 வழித்தடங்களில்54கிலோமீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில்இயக்கப்பட்டுவருகிறது.

பயணிகளிடம் அதிகபட்ச கட்டணமாக ரூ.70 வரைவசூலிக்கப்பட்டுவந்தது. இந்த கட்டணத்தை குறைக்க அனைத்து தரப்பினரும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனை பரீசிலித்த முதல்அமைச்சர்எடப்பாடி பழனிசாமி, மெட்ரோ ரெயில் கட்டணத்தை குறைத்து உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் சென்னைமெட்ரோரெயில் நிறுவனம் புதிய கட்டண விவரத்தைவெளியிட்டது.

அதன்படி டோக்கன் முறையில் வாங்கப்படும் டிக்கெட்டுகளுக்கு அதிகபட்சமாக இருந்த ரூ.70 கட்டணம் ரூ.50 ஆக குறைக்கப்பட்டு உள்ளது.

இந்த புதிய கட்டணம் இன்று காலை முதல் அமலுக்கு வந்தது. பயண அட்டை மூலம் டிக்கெட் பெறுபவர்களுக்குபத்துசதவீதமும், கியூஆர் குறியீடு மூலம் டிக்கெட் பெறுபவர்களுக்கு 20 சதவீதமும் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

அதிகபட்ச கட்டணம் ரூ.70ல் இருந்து ரூ.50 ஆக குறைக்கப்பட்டுள்ளது பயணிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

சென்னைவிமானநிலையத்தில் இருந்து தண்டையார்பேட்டை மற்றும் விம்கோநகர்செல்லமுன்பு ரூ.70 இருந்தது.

தற்போது ரூ.50 ஆக குறைக்கப்பட்டுள்ளது. சென்ட்ரலில் இருந்து கோயம்பேடு பஸ் நிலையம் செல்ல ரூ.40லிருந்து 30 – ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆலந்தூரில் இருந்து அண்ணாநகர் கிழக்கு செல்ல முன்புரூ.50கட்டணம்வசூலிக்கப்பட்டது.

தற்போது ரூ.10 குறைக்கப்பட்டுரூ.40வசூலிக்கப்படுகிறது.

கிண்டியில் இருந்து அசோக் நகர் செல்லவும், வடபழனியில் இருந்து கோயம்பேடு பஸ்நிலையம்செல்லவும்முன்புரூ.30 ஆக இருந்த கட்டணம் தற்போது ரூ.20 ஆக குறைக்கப்பட்டது.